கிருபையுள்ள வார்த்தை®
KIRUBAIYULLA VAARTHAI
லூக்கா (LUKE) 4:22

Vol - 17 | May மே | 2016
ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-

# ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல், நான் உங்களைத் தேற்றுவேன்

ஏசாயா 66:13

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

வாசகர்கள் அனைவருக்கும் அன்னையர் தின வாழ்த்துக்கள்

## இதழின் உள்ளே...

அஞ்ஞானிகள் 3
நாம் முற்றிலும் வெற்றி ... 6
பெத்தானியா சகோதரிகள் 8
வாலிபர் பகுதி ... 10
சிறுவர் பகுதி 15

*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.

## கிருபையுள்ள வார்த்தை
## TV நிகழ்ச்சிகள்

வாசகர்கள் கவனத்திற்கு...

**புதுயுகம் T.V. யில்**

செவ்வாய் காலை - 6.15 மணிக்கு

**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை 6-45 மணி

**நம்பிக்கை T.V. யில்**

வெள்ளி காலை 6-15 மணி

கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

செய்தியாளர்கள்:

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)










**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:
**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**
P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**
பாவத்தை உணர்த்தும்
பரிசுத்த வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses
only and
receive
The Voice of Truth
Intl. Vol.85

ஆசிரியர் உரை ...

# அஞ்ஞானிகள் !

P.C. பிலேமோன் ராஜா



ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் உள்ள இடைவெளி மிகவும் பெரியது. அது ஞானிக்கும் பைத்தியத்திற்கும் உள்ள இடைவெளி போன்றது. ஞானம் என்பது, தேவனுக்கு பயப்படுகிறதினாலே ஒருவரிடத்தில் ஆரம்பமாகிறது. நீதி 1:7 "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்,மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்" என்கிறது. அவர் அதை தேவனிடத்தில் கேட்டு பெற்றுக்கொள்வதினாலே முழுமையடைகிறது. யாக் 1:5ல் "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும்". என்று வாசிக்கின்றோம்.

ஞானம் 'தேவனுக்கடுத்த ஞானம்', 'உலகத்துக்கடுத்த ஞானம்' என இரண்டு வகைப்படும்

'அஞ்ஞானம்' என்பது, முழுமையாகவே தேவனுக்கு எதிரானது. அதாவது தேவனுக்கு எதிரான எல்லாமே அஞ்ஞானமாக இருக்கிறது. சில நேரங்களில் இந்த பயங்கரமான அஞ்ஞானம், பாதுகாப்பானது போல தோன்றுமே தவிர, அது உண்மையில் ஞானமல்ல.

யார் அஞ்ஞானி ?

### 1. பரலோக தேவனை தவிர்த்து, மற்றவற்றை ஆராதிப்பவர்கள்.

ஆராதனை அல்லது தொழுகை என்பது தேவனுக்குரியது. அதை மற்ற யாருடனோ, மற்ற வேற எதுவுடனோ பங்கிடுவது அஞ்ஞானம். **எசே 20:32** மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்து, அஞ்ஞானிகளைப் போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே, உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை".



ஆகையால் அப்படிப்பட்ட ஆராதனையும், பலியும் வீண், மற்றும் பாவமுமாகும். **1கொரி 12:2** "நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதை செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே''. மேலும் பவுல் அந்த பலிகள் பேய்களுக்குரியது என்கிறார்; **1 கொரி 10:20** "அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை".

ஆகையால் தேவனுடையதை, தேவனுக்கு மட்டுமே செலுத்த வேண்டும்.

### 2. வீண் வார்த்தைகளை பேசுபவர்கள்.



**மத்தேயு 6:7** "அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும் போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்".

ஒவ்வொன்றையும் அளக்க ஒரு அளவுகோல் உண்டு.

திட பொருளை அளக்க கிலோ கிராம்;

திரவ பொருளை அளவிட லிட்டர்;

நிலங்களை அளக்க மீட்டர் அல்லது அடி; ஆனால்,

வார்த்தைகளை எப்படி அளப்பது?

மிகவும் எளிது. நாம் பேசுகின்ற வார்த்தை, பேசுகின்ற நமக்கும், அதை கேட்கின்றவர்களுக்கும், அவர்களது ஆத்துமத்திற்கும் எப்பொழுது பயனற்றதாக உள்ளதோ, அவைகள் எல்லாம் வீண்வார்த்தைகள்!

**எபே 4:29** "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவாக நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்".

### 3. உலக கவலையினால் நிறைந்திருப்பவர்கள்

கவலைக்கும் அக்கறைக்கும் வித்தியாசம் உண்டு. அக்கறை நம்மை உந்தி செயல்பட வைக்கும்; கவலை நம்மை வருத்தி முடக்கிப்போடும்.



**மத்தேயு 6:32** "இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்".

**மத்தேயு 6:27,31** "கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தை கூட்டுவான்"? "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று , கவலைப்படாதிருங்கள்"

இயேசு, நாம் அக்கறையுள்ளவர்களாகவும், அதே சமயத்தில் கவலையற்றவர்களாகவும் இருக்கும்படி விரும்புகிறார். **பிலி 4:6–7** "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்".

### 4. தங்களைத் தாங்களே கறைப் படுத்துகிறவர்கள்.

**1தெச 4:4–7** "தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து, இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரி கட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்".




ஒருவர், சேறுள்ள இடத்தில் அமர்ந்து அந்த சேற்றை தன் மேலே அள்ளி போட்டுக்கொண்டு இருந்தால், அவரைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள். அதனை விட கொடியது, ஒருவர் தன் உடலை மோகத்தினால் கறைப்படுத்துவது ஆகும். ஏனெனில் கறைபடுவது உடல் மட்டுமல்ல ஆன்மாவும் தான். மோகம் அல்லது காமவிகாரத்தினால் ஒருவர் தன்னை பல விதங்களில் கறைப்படுத்த முடியும். உதாரணமாக விபச்சாரம், வேசித்தனம், சுயபுணர்ச்சி, ஆண்புணர்ச்சி, மிருக புணர்ச்சி, ஆபாச வார்த்தைகள், மோக சிந்தனைகள் மற்றும் ஆபாச காட்சிகள் போன்றவை ஆகும்.

### 5. தன்னை திருத்திக்கொள்ளாமை அல்லது மனந்திருந்தாமை.

**மத் 18:15–17** "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்கு செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும், அவன் செவி கொடாமற் போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக".




நாம் நமது தவறுகளை உணராதிருப்பது, அல்லது அதை சரியென்று சாதிப்பது, அல்லது அந்த தவறை தொடர்ந்து செய்ய நியாயமான காரணங்களை தேடிக்கண்டுபிடிப்பது எல்லாம் அஞ்ஞானம் தான். **நீதி 27:12** "விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்: பேதைகளோ நெடுகப்போய்த் தண்டிக்கப்படுகிறார்கள்".

**நீதி 29: 1** "அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடிதியில் நாசமடைவான்". தாவீது, "நான் பாவம் செய்தேன்" என்றதினாலே வாழ்ந்திருந்தான். சவுல், தான் செய்த பாவத்திற்கு நியாயமான காரணம் தேடி வீணாய் போனான். ஏலியின் புத்திரர்களும், ஆரோனின் புத்திரர்களும், அனனியா சப்பிராளும் மனம்திரும்பாமையினால் தேவனால் அழிந்துபோனார்கள். இப்படிப்பட்ட அஞ்ஞான செயல்களுக்கு நம்மை நாமே விலக்கிக் காப்போம்.

### 6. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளாதவர்கள்.

**நீதி 11:30** "நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்''. ஆத்துமாக்கள் பேரில் அக்கறைக்கொண்டு, அவர்களை நித்தியத்திற்கு நேராக வழிநடத்தும்படி கரிசனை உள்ளத்தோடு பிரயாசப்படுகிற ஒவ்வொருவரும் ஞானவான்கள். 'யார் எப்படி போனால் எனக்கென்ன? அவர்கள் நரகத்திற்கு போனால் நான் என்ன செய்ய முடியும்?' என சொல்லிக்கொண்டு, மற்றவர்களுக்கு பரலோகத்திற்கு போகும் வழியை போதிக்காதவர்கள் ஒவ்வொருவரும் அஞ்ஞானிகள்.




எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவசித்தம். இதைச் சத்தம் போட்டு சொல்லாமல் மௌனமாக இருக்கக்கூடாது! இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள், அறிவியாதிருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். **எசேக்கியேல் 3:17–19** "மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்திற்கு காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.ச ாகவேச ாவாய்ள ன்றுந ான்து ன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்த துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப்பழியையோ உன் கையில் கேட்பேன். நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய்".

**இறுதியாக...** பிரியமானவர்களே! இந்த விடுமுறையை, கர்த்தருக்குள் ஞானமாக செலவிடப்போகிறீர்களா? அல்லது உலகத்துக்குள் வீணாக செலவிடப் போகிறீர்களா? நாட்கள் பொல்லாதவைகளாக இருக்கிறது. காலத்தை பிரயோஜனப்படுத்த தாமதிக்க வேண்டாம்.

ஞானவான்களாய் நடந்து, ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்கு உட்படுத்தி நட்சத்திரங்களைப் போலவும் சதாகாலமும் பிரகாசிக்கிறவர்களாயிருக்க முயலுவோம் **(தானி 12:3)**

– அன்புடன், ஆசிரியர்

## Form IV
### Statement about ownership and other particulars about Newspaper

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Madurai |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printers Name | : | N. Jayakarthikeyan |
| | Nationality | : | Indian |
| | Address | : | Thee Classic Printers<br>27, Kakathope Street<br>Madurai - 625 001 |
| 4. | Publisher's Name | : | P.C. Philemon Rajah |
| | Nationality | : | Indian |
| | Address | : | 45 C/1, Church Lane, Coronation St.,<br>Arasaradi, Madurai - 625 016 |
| 5. | Editor's Name | : | P.C. Philemon Rajah |
| | Nationality | : | Indian |
| | Address | : | 45 C/1, Church Lane, Coronation St.,<br>Arasaradi, Madurai - 625 016 |

I, P.C. Philemon Rajah, hereby declare that the particular given above are true to the best of my knowledge and belief.

Date : 11-05-2016

P.C. Philemon Rajah
Publisher & Editor

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு கீழ்ப்படியக்கடவன்"
ரோமர். 13:1

**மே 16ல் தவறாமல் வாக்களியுங்கள்**



வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து ...

தொடர் 7 # நாம் முற்றிலும் வெற்றி கொள்ளுகிறவர்கள்!

## We are more than Conquerers !

**வெளி. 1:9–11** "உங்கள் சகோதரனும், இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான்டே தவவ சனத்தினிமித்தமும்இ யேசுகி றிஸ்துவைப்ப ற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு எனும் தீவிலே இருந்தேன். கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளச் சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன். அது: நான் அல்பாவும் ஓமேகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா, எனும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது."

### எழுத்தாளரின் அறிமுகம்: [வச.9]

**"சகோதரன்":** இங்கே யோவான், தன்னை சபை விசுவாசிகளோடு தானும் ஒரு சகோதரன் என்று அறிமுகப்படுத்திக்கொண்டார். அவர் தன்னை, உங்கள் ரெவரன்ட், 'பாஸ்டர்', 'குருவானவர்', 'பங்கு குரு', 'ஆலயக் குரு', 'ஆயர்', அல்லது 'பேராயர்' என்றோ அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக அவர் தன்னை "உங்கள் சகோதரன்" என்று குறிப்பிட்டார்.

**மத்தேயு 23:1–12ல்** கிறிஸ்து போதித்த உண்மைகளை யோவான் இங்கே வெளிப்படுத்துகிறார். அவர் தன்னை தாழ்த்துகிறார். இயேசு தமது ராஜ்ஜியத்தில் வரும்போது, இந்த யோவானைத்தான் அவருடைய தாயார் குறிப்பிட்டு, இவருக்கும், இவருடைய சகோதரனாகிய யாக்கோபுக்கும் இயேசு தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் போது, வலது இடது புற ஆசனங்களைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டாள். இவர்களும் கேட்டிருந்தார்கள் **(மத்தேயு 20:20–23: மாற்கு10:35–37).** அப்பொழுது இயேசு **மத்தேயு23:8ல்** குறிப்பிட்ட போதனைகளையே இங்கேயும் போதித்தார். அவர், "நீங்கள் எல்லாரும் சகோதரர்களா யிருக்கிறீர்கள்" என்று சொன்னார். இந்த உபதேசம் யோவானில் அதிகமாக பதிந்திருக்கக் கூடும். அவர் வெற்றி கொண்ட அப்போஸ்தலனாக இருக்கக் காரணம் அவருடைய தாழ்மையும் ஒரு காரணமாகும்.

**"பங்காளன்".** அடுத்ததாக யோவான் சபை விசுவாசிகளுடன் மூன்று விஷயங்களில் தன்னை பங்காளன் என்று குறிப்பிட்டார். கிறிஸ்துவினிமித்தம் வரும் உபத்திரவங்களில், தான் அவர்களுடைய பங்காளன் என்று சொன்னார். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யோவான், ரோமர்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களிலும் தைரியமாய் போதித்தார். விக்கிரக வணக்கத்தாராகிய அவர்கள், அவரை பத்மு எனும் தீவில் சிறைவைத்து கொடுமைப்படுத்தினார்கள். அந்தக் காலக்கட்டத்தில், அதேப் போல உபத்திரவப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுடன் யோவான் தன்னை பங்காளன் என்று குறிப்பிட்டார்.

**இரண்டவதாக,** யோவான் அவருடைய ராஜ்யத்திற்குப் பங்காளனாகக் குறிப்பிடுகிறார். இந்த ராஜ்யம் தான், **தானியேல் 2:40ல்** ரோம அரசின் ஆளுகைக் காலத்தில் ஆண்டு கொண்டிருந்த 10 ராஜாக்களின் நாட்களில் ஸ்தாபிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. பின்னர் அதிகாரம் 9ல் அது கி.மு.30ம் ஆண்டு என்றும் கணக்கிடப்பட்டு சொல்லப்படுகிறது. மேலும் புதிய ஏற்பாட்டில் யோவான் ஸ்நானன், இயேசு, 12 அப்போஸ்தலர்கள், 70 சீஷர்கள் என 84 பேர் இந்த ராஜ்யமாகிய சபையை முன்னுரைத்தனர். (வாசிக்கவும்: **மத்தேயு3:2: 4:17: 6:10 : 10:1–7).** ஆக, மாற்கு 9:1லும் அப்போஸ்தலர் 1:8 லும் இயேசு குறிப்பிட்ட அடையாளத்தின்படியே பெந்தெகோஸ்தே நாளில் ஸ்தாபிதம் பெற்றதும், தாவீதின் ராஜ்யத்தை அடையாளப்படுத்திக் காட்டுவதுமாகிய ஆவிக்குரிய ராஜ்யம் இதுவே! **(அப் 2:1–4: 31–35, 37–47). மத்தேயு16:18,19ல்** இயேசு வாக்குத்தத்தமாக பேசிய சபை இதுதான்.

அது 3000 பேரைக் கொண்டு ஸ்தாபிதம் பெற்றது. அந்த ராஜ்யத்தின் நபர்களாகிய, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் இரட்சிக்கப்பட்ட அனைவரோடும் அவர் பங்காளன்.

**மூன்றாவதாக,** யோவான், சபை விசுவாசிகளின் பொறுமைக்குத் தன்னை பங்காளன் என்று சொன்னார். அந்தக் கிறிஸ்தவர்கள் ரோம அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த போதிலும், கிறிஸ்துவின் ராஜ்யத்துக்குட்பட்டிருந்ததை மேன்மையாகக் கருதினர். அதுவே ரோம அரசுக்கு உபத்திரவங்

கொடுக்க காரணமாயிற்று. அப்படிப்பட்ட நேரங்களில் தங்கள் பொறுமையைக்காத்துக் கொண்டனர். இனி வரும் காலத்திலும் வரும் உபத்திரவங்களில் தன்னை பங்காளனாகக் குறிப்பிடுகிறார்.

இப்படி யோவான் சபையின் விசுவாசிகளுடன் மூன்று காரியங்களில், தன்னை 'பங்காளி' என்று குறிப்பிட்டார்.

## எழுதப்பட்ட பின்னணியின் அறிமுகம் [வச .1]

அ) யோவான் பத்முத் தீவில் சிறை வைக்கப்பட்டிருந்தார் **(வெளி 1:9).** அவர் இயேசு கிறிஸ்துவின் சாட்சியினிமித்தமும், போதித்த தேவ வசனத்தினிமித்தமும் தீவில் சிறை வைக்கப்பட்டார்.

ஆ) அந்தத் தீவு ஒரு தனிமைப்படுத்தப்பட்டதும் எப்பொழுதும் பயங்கர இரைச்சலுடன் கூடிய காற்று வீசக்கூடியதுமான தீவாக இருந்தது. ஆரவார சத்தம் கொண்ட கடல் அலைகள் கரையை மோதியடித்துக் கொண்டிருந்தது. யோவானின் சத்தத்தை அதிலே அடக்கிவிடலாம் என ரோம அரசு தப்புக் கணக்கு போட்டுவிட்டது போலும். ஆகிலும் கர்த்தர், அவரை ஆவியிலே பெலப்படுத்துகிறார்.

இ) அது ஒரு "கர்த்தருடைய நாள்". அந்நாளில் அவர் "ஆவிக்குள்ளானார்". இந்த கர்த்தருடைய நாள் என்பது கிரேக்க மொழியில் "he kuriake hamar" ("ஹே குரியாக்கே ஹாமார்") என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தப் பதம் புதிய ஏற்பாட்டில் இரண்டு இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது (வெளி 1:10; கொரிந்தியர் 11:2). இது யேகோவாவின் நாளல்ல; இது கர்த்தர் ஆக்கினையைக் கொடுக்கும் நாளைக் குறிப்பதல்ல; இது கர்த்தருடைய இரண்டாம் வருகை நாளுமல்ல; இவைகளெல்லாம் கர்த்தருடைய நாள் என்று சொல்லப்பட்ட போதிலும், அவைகளிலிருந்து வித்தியாசப்பட்ட ஒரு நாளைக் இது குறிக்கிறது. இது கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்த நாளாகிய வாரத்தின் முதல் நாளைக் குறிக்கிறது. அதாவது, நமது வார்த்தையில் ஞாயிற்றுக் கிழமையைக் குறிக்கிறது **(மத்தேயு 28:1 : அப் 20:7 : 1கொரிந்தியர் 11:21 ).**

ஈ) அந்நாளிலே "நான் ஆவிக்குள்ளானேன்" என்று யோவான் சொன்னார்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி பாபிலோனில் சிறை வைக்கப்பட்டிருக்கையில், கேபார் நதியண்டை அமர்ந்திருந்தார். யூதாவின் மூப்பர்கள் அவருக்கு முன்பாக உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது அவருடைய தலை மயிரைப் பிடித்து, யாரோ ஒருவர் வானத்துக்கும் பூமிக்கும் இடையே கொண்டு போய் எருசலேமிலே விட்டார். அது கர்த்தருடைய கரம். தேவாலயத்துக்குள் விடப்பட்ட எசேக்கியேல், அந்த காலத்தில் நடந்த அருவருப்பான விக்கிரக வணக்கங்களைக் கண்டார் ( எசேக்கியேல் 8:1-17 ). அதாவது அவருடைய சரீரம் பாபிலோனிலே இருந்தது; ஆவியிலோ அவர் எருசலேம் தேவாலயத்தில் இருந்ததாக தரிசனம் பெற்றார். இப்படித்தான் யோவானுடைய நிலை.

ஒரு நாள் காலை வேளையில், யோவான், தீவை சுற்றிலும் மோதிக் கொண்டிருந்த கடல் அலையைப் பார்த்துக் கொண்டிருந்திருப்பார். அது கர்த்தருடைய நாளாக இருந்தபடியால், கடலலைகளுக்கு மேல் அவர் நினைவலைகள் அவரை மோதியடித்திருக்கும் பெருமூச்சு விட்டவராய் தன் முன்பு ஆரவாரத்துக் கொண்டிருந்த எபேசு சபை நினைவுக் வந்திருக்கும். "என் சகோதர சகோதரிகள் இந்நேரம் கர்த்தரைத் துதித்துப் பாடி, உருக்கமான ஜெபத்தை ஏறெடுத்து, வசனத்தைக் கேட்டு அவருடைய பந்தியிலே சந்தோஷமாக பங்கு பெற்றுக் கொண்டிருப்பார்கள். நான் இங்கே தனியனாய் வாடிக் கொண்டிருக்கிறேன்" என புலம்பி, முழங்காலிட்டு ஜெபிக்கத் தொடங்கியிருப்பார். அவருடைய சரீரத்தை ரோம அரசு தனிமைப்படுத்த முடிந்தது. ஆத்துமாவோ தன் சிறகு அடித்து மேலெழும்பியது. கர்த்தர் கொடுத்த தரிசனங்களைக் கண்டார், தனது மாம்சக் கண்களால் அல்ல, கர்த்தர் விளம்பின சத்தத்தைக் கேட்டார், தனது மாம்ச காதுகளை அல்ல. ஆம் ! அவர் ஆவிக்குள்ளாகி, தரிசனங்களைக் கண்டார். கர்த்தரின் வெளிப்பாட்டை எழுதத் துவங்கினார்.

யோவான் கேட்டது (வச.10ஆ), "அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளச் சத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்". இந்த சத்தத்தில் அவர் என்ன கேட்டிருப்பார்?

அது தாம் என்றென்றும் நித்தியமாக இருப்பதாக சொல்லியது. "நான் அல்பாவும், (கிரேக்க கடைசி எழுத்து) முந்தினவரும் பிந்தினவருமாயிக்கிறேன் என்றது".

எனவே, ''நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற... ஏழு சபைகளுக்கும் அனுப்பு" என்றும் சொல்லியது. அதாவது ஆசியாவிலிருந்த ஏழு உள்ளூர் சபைகளுக்கு எழுதச் சொல்லியது !

யோவான் கண்டது என்ன ?

போதகர் **E.A. ஆறுமுகம்**
திண்டுக்கல்

# பெத்தானியா சகோதரிகள்



Sis. Kabita Gootham

இந்த சம்பவம் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிற ஒன்று. "பின்பு அவர்கள் பிரயாணப்பட்டு போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரி அவரை தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து கர்த்தருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்லபங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்'' **(லூக்கா10:38–42).** இப்படி, இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் தங்களுடைய வீடுகளில் ஏற்றுக் கொண்ட, இன்னும் சில நிகழ்ச்சிகளையும் வாசிக்கிறோம். உதராணமாக சீமோன், லேவியனாகிய மத்தேயு, சகேயு போன்றவர்கள். இயேசுவும் அவருடைய தாயார் மரியாளும், கானாவூர் கல்யாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். நம்முடைய வீடுகளில் யாரையாவது அழைத்தால், வருகிற விருந்தாளிகளை முறையாக உபசரிக்க நாம் ஆயத்தப்படுத்த வேண்டும். நாம் வீட்டை சுத்தப்படுத்துவோம். நல்லதொரு உணவை ஆயத்தப்படுத்துவோம்! இவைகளெல்லாம் புறம்பான ஆயத்தங்களே, ஆனால் நம்முடைய குடும்பத்தின் வாழ்க்கைச் சூழல் எப்படியிருக்கிறது ?

1. கணவன் மனைவியிடையே அன்பு நிலவுகிறதா? அப்போஸ்தலனாகிய பவுல், "மனைவிகளே, கர்த்தருக்கு ஏற்கும்படி, உங்கள் புருஷருக்கு கீழ்படியுங்கள் புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள்; அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள்" என்று சொல்லுகிறார். மேலும், "எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூறுவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்பு கூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் என்றார்" **( எபேசி 5:33).**

2. நமது பிள்ளைகள் கீழ்படிதலுள்ளவர்களாயிருக்கிறார்களா? "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது. **(கொலோ3:20).** "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள் இது நியாயம்.உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது **(எபேசி.6:1–3 ).**

3. நமது மூப்பர்களை நாம் கனம் பண்ணுகிறோமா ?

4. நமது பிரசங்கியார்களை மதிக்கிறோமா ?

5. இயேசுவுக்கும், அவருடைய சபைக்கும் நமது முதலிடத்தைத் தருகிறோமா ?

6. குடும்ப ஜெபம் நம்மிடத்தில் உண்டா ?

7. நாம் தவறாமல் சபையின் தொழுகைகளில் கலந்து கொள்கிறோமா ?

8. மற்ற கிறிஸ்தவர்களுடன் ஐக்கியமாயுள்ளோமா ?

9. நாம் வெட்கப்படும்படியான காரியம் எதுவும் நம்முடைய வீட்டில் இருக்கிறதா ?

இயேசு உங்கள் இருதயத்திலும், உங்கள் வீடுகளிலும் அழைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுவதை விரும்புகிறார். ஆனால் சாத்தானுக்கு எவ்வித அழைப்பும் தேவையில்லை. அவன் நமது வாழ்க்கையையும் குடும்பங்களையும் சீரழிக்கிறான்.அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்குச் சொன்னதாவது "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" **(ரோமர் 2:13).** "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" அந்நியரை உபசரிக்க மறவாதிங்கள்" **(ஆதி 18:1:19:1).** எலிசா தீர்க்கதரசி தன்னுடைய பட்டணத்தின் வழியாக கடந்து செல்லும் போதெல்லாம் சூனேமியா ஸ்திரீ அவரை உபசரித்தாள். அவள் தீர்க்கதரிசி தங்குவதற்கு ஏதுவாக மெத்தையின் மேல் ஒரு அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு கட்டிலையும், மேஜையையும் நாற்காலியையும், குத்து விளக்கையும், வைத்தாள். **(2 ராஜா. 4:7–10).**

இயேசு, புதிய ஏற்பாட்டில் அநேக வீடுகளுக்குப் போனதாக நாம் வாசிக்கிறோம். அவர் பேதுருவின்

வீட்டிற்குப்போய் அவனுடைய மாமியாரைச் சுகப்படுத்தினார். வீட்டிற்குப் போய் ஜெப ஆலயதலைவனாகிய யவீரின் குமாரத்தியை மரித்தோரிலிருந்து எழுப்பினார். சகேயுவின் வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது, ''இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே'' என்றார். **(லூக்கா 19:9)** அப்போஸ்தலனாகிய பேதுரு, யோப்பா பட்டணத்தில் தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டில் பிரவேசித்தபோது, புறஜாதிக்குப் போதிக்கும்படியான அழைப்பு வந்தது **(அப் 9:43).** அப்போஸ்தலனாகிய பவுல், தமஸ்குவிலிருந்து யூதாவின் வீட்டில் சென்ற போது, அன்னியர் அவரிடத்தில் வந்தார்கள் **(அப் 9:10–18).** அப்போஸ்தலனையும், அவருடைய ஊழியக் குழுவையும் பிலிப்பி பட்டணத்தில் சகோதரி லீதியாள் ஏற்று, தன் வீட்டில் உபசரித்து, அந்தப்பகுதியில் சுவிசேஷம் பரவ உதவி செய்தாள். பவுல் கொரிந்துவில் இருந்தபோதும், அவர் ஆக்கில்லா பிரிஸ்கில்லா தம்பதியுடன் தங்கியிருந்தார் **(அப் 18),**

இயேசுவை நமது வாழ்கையிலும் இருதயத்திலும் வீட்டிலும் ஏற்றுக்கொள்வோமாகில் நாம் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். மார்த்தாளின் சகோதரி மரியாள், இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்திருந்தாள். தேவனுடைய வசனத்தின் மேல் அவள் தாகமுள்ளவாயிருந்தாள். "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக்கதறுவது போல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக்கதறுகிறது" **(சங்கீதம் 42:1).** "மார்த்தாள்ப ற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்த மடைந்தாள்." **(லூக்கா 10:40).** இயேசுவின் இனிய வசனங்களினால் மரியாள் தன்னைப் போஷித்துக் கொண்டிருக்கையில், இவள் மாமிசப் பிரகாரமான போஜனத்தைக் குறித்து கவலைப்பட்டாள். 'தேவையானது ஒன்றே' என்று இயேசு சொன்னார். தாவீது ராஜாவும் அந்த ஒரே காரியத்தை வாஞ்சித்தார். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும் அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும் படியாகவும், நான் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் **(சங்கீதம் 27:4)**

மரியாள் நல்ல பங்கைத் தெரிந்து கொண்டதற்காக, இயேசு அவளைப் புகழ்ந்தார். அவள் மாம்சப் பிரகாரமான போஜனத்தைக் காட்டிலும் ஆவிக்குரிய போஜனத்தை தெரிந்து கொண்டாள். நமது வாழ்க்கை, அவைகளில் ஏற்படும் விளைவுகள், பிரதிபலன், நாம் சென்று சேருமிடம், ஆகிய அனைத்தும் நமது வாழ்வில் நாம் எடுக்கும் முடிவைப் பொறுத்ததே! ஆபிராகாமும் லோத்தும் ஒன்றாக வாழ இயலவில்லை. ஒருவருக்கொருவர் பிரிந்து வாழ்வதையே விரும்பினர். "அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து: யோர்தானுக்கு அருகான சம பூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கு முன்னே, சோவாருக்குப்போம் வழிமட்டும் அதுக ர்த்தருடையதே தாட்டத்தைப்டே பாலவும்,எ கிப்துதே தசத்தைப் போலவும் இருந்தது. அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சம பூமி முழுவதையும் தெரிந்து கொண்டு கிழக்கே பிரயாணப்பட்டுப் போனான். இப்படி அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்தார்கள். ஆபிரகாம் கானான் தேசத்தில் குடியிருந்தான்; லோத்து அந்த யோர்தானுக்கு அருகான சம பூமியிலுள்ள பட்டணிங்களில் வாசம் பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். சோதேமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய்" **(ஆதி.13:10–13).** லோத்து துன்மார்க்கரோடே வாசம் பண்ணுவதைத் தெரிவு செய்தான்.

மோசே ஒரு இளவரசனுக்குரிய சந்தோஷங்களை அநுபவிக்கிற வாய்ப்பைப் பெற்றிருந்தும், தேவனுடைய ஜனங்களோடு உபத்திரவங்களை அனுபவிப்பதை தெரிந்து கொண்டார். "விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமார்த்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு", **(எபி.11:24,25).** யோசுவாவும் அவனுடைய வீட்டாரும் உண்மையான தேவனாகிய யேகோவாவை மட்டுமே சேவிக்கத் தெரிந்து கொண்டனர் **(யோசுவா24:15).** தாவீது, தானியேல், மற்றும் அனைத்து தேவ மனுஷர்கள், ஒரே ஒரு உண்மையான தேவனை மட்டுமே பின்பற்றுவதைத் தெரிந்து கொண்டனர்.

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. P.A. சுசித்ரா – சேலம்
2. M. வின்செனட் – கோவை
3. I. ஷீபா பிரியதர்ஷினி– சிவகங்கை
4. A. கெனித் சாம்– மதுரை
5. D. மெர்வின் குமார்– நெல்லை

வாலிபர் பகுதி

# பரலோக கடவுள் மனிதனை படைத்தது ஏன்?



அன்பான வாலிப சகோதரனே! சகோதரியே! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள். இந்த உலகத்தில் இருக்கின்ற படைப்புகளிலே மிகவும் உயர்ந்த படைப்பு மனிதன் என்பது நாம் அறிந்ததே! சர்வ வல்லமை பொருந்திய பரலோக தேவன், ஏன் மனிதனைப் படைத்தார்? குறைவான ஞானம் பெற்ற நாமே, நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் ஏதாவது காரணங்களை கொண்டிருக்கிறபோது, சர்வ ஞானியாகிய தேவன் செய்கின்ற செயலுக்கு, நிச்சயமாக ஆழமான தூய்மையான காரணங்கள் அல்லது நோக்கங்கள் இருக்கும். பைபிள், மனிதனுடைய படைப்பை பற்றி மிகவும் உயர்வாக, இன்னும் சொல்லப்போனால் உன்னதமாக பேசுகின்றது.

## 1. மனிதனை எப்படி படைத்தார்?

மனிதனை ஏன் படைத்தார் என்பதை அறிவதற்கு முன் எப்படி படைத்தார் என்பதை அறிய முயலுவோம். இந்த உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் தேவன் தமது வார்த்தையால் படைத்தார். **ஆதி 1:24-25** "பின்பு தேவன், பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும், ஜாதி ஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்".

### அ) ஆனால் மனிதனை தமது சொந்தக் கரங்களினால் உண்டாக்கினார் (படைத்தார்)!

**ஆதி 2:7** தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்". எல்லாவற்றையும் 'உண்டாகக்கடவது' என்று வார்த்தையினாலே படைத்த தேவன், மனிதனை தனது கரங்களினாலே உருவாக்கினார். என்ன ஒரு சிலாக்கியம்!

### ஆ) தன்னுடைய சாயலினால் (ஆத்துமா) படைத்தார்

**ஆதி 1:26,27** "பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்''. ஒவ்வொரு விலங்கினங்களுக்கும், மரங்களுக்கும், பறவைகளுக்கும் வெவ்வேறு சாயலைக் கொடுத்த தேவன், மனிதன் வேறு யாரை போலவும் இல்லாமல், தன்னை போலவே இருக்கும் படி, மனிதனுக்கு தன்னுடைய சாயலைக் கொடுத்தார். உண்மையிலேயே இது மிகவும் பெருமைக்குரிய காரியம்.



### இ) தன்னுடைய ஜீவனையே (உயிர்) கொடுத்து படைத்தார்!

**ஆதி 2:7** தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணிணாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; மனுஷன் ஜீவாத்துவமாவானான். தேவனுடைய 'உண்டாகக்கடவது' என்ற வார்த்தையில் எல்லாவற்றிற்கும் உருவமும், உயிரும் உண்டாயின. ஆனால், மனிதனுக்கு மட்டும் தேவன், தனது ஜீவனையே (சுவாசம்) கொடுத்து, உயிர் கொடுத்தார் என்பது மிகவும் பிரமிப்பான, உணர்வுப்பூர்வமான காரியம்.

### ஈ) அவனுக்கு தேவையான எல்லாவற்றையும் தந்து படைத்தார்

**ஆதி 1:29** "பின்னும் தேவன் : இதோ ,பூமியின் மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்கு கொடுத்தேன்; அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது" தேவன், மனிதன் உயிர்வாழ தேவையான எல்லாவற்றையும்

(சுகாதாரமான உணவு, உடை, இருப்பிடம், சுத்தமான காற்று, தண்ணீர்) கொடுத்து அவனை படைத்தார்.

உ) அவனை ஆசீர்வதித்து, அதிகாரத்துடனே படைத்தார்!

**ஆதி 1:28** "பின்பு தேவன் அவர்களை நோக்கி : நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்".

இந்த உலகம் (பூமி) மனிதனுக்கு கீழ்படுத்தப்பட்டது; மற்றும் படைக்கப்பட்டவைகள் யாவும் மனிதனுக்கு கீழ்ப்படுத்தப்பட்டன. மனிதன் எல்லாவற்றையும் ஆண்டுகொள்ளும்படியும், தேவனுடைய ஆசீர்வாதத்துடனும் படைக்கப்பட்டான். பரலோக தேவனால் மிகவும் ஆசையாக நேசித்து (சிலாகித்து) படைக்கபப்பட்டவன் தான் மனிதன்.

## 2. மனிதனை ஏன் படைத்தார்?

**மல்கியா 2:15.** "அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே?. பின்னர் ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்''. தேவபக்தியுள்ளவர்களாக வாழ நாம் என்ன செய்ய வேண்டும்? தேவபக்தியுள்ளவர்களாக வாழ்வது என்றால் என்ன?

அ) தேவனோடு வாழ்வது...

முதலாவது, தேவபக்தியான வாழ்க்கை என்பது தேவனுடன் வாழ்வதாகும். ஏனோக்கும், நோவாவும் தேவனுடன் வாழ்ந்தார்கள் (ஐக்கியமாகயிருந்தார்கள்). **ஆதி 5:22** "ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்".



**ஆதி 6:9** "நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்".

நாமும் தேவனோடும், கிறிஸ்துவோடும் ஐக்கியமாக இருக்க வேண்டும். **1 யோவான் 1:3,7** "நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. அவர் ஒளியிலிருக்கிறதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால், ஒருவடோருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்".

ஆ) தேவனுக்காக வாழ்வது...

அடுத்ததாக, தேவபக்தியான வாழ்க்கை என்பது தேவனுக்காக வாழ்வதாகும். **ரோமர் 14:7–8** "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்,நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாகிறோம்". மற்றும், **2கொரி 5:14–15** "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால் , எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்".

இ) தேவனை போல வாழ்வது...

இறுதியாக, தேவபக்தியான வாழ்க்கை என்பது தேவனைப் போலவே வாழ்வதாகும்.

**1 பேதுரு 1:15** "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்".

**1 யோவான் 2:6** "அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்".

**1 யோவான் 3:7** "பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்".

எல்லாவற்றையும் மனிதனுக்காக படைத்த தேவன், மனிதனை தனக்காக படைத்தார். இந்த ஒரு உயர்ந்த நோக்கம், உன்னத நோக்கம் என்ன ஆனது? இன்னும் சிந்திப்போம்...

R. ஆண்டனி ராஜா

தெரிந்ததும்... தெரியாததும்...

# உணவுப் பழக்கம், பழமொழி வடிவில் !

1. சீரகம் இல்லா உணவு சிறக்காது.
2. தன் காயம் காக்க வெங்காயம் போதும்.
3. வாழை வாழ வைக்கும்.
4. அவசர சோறு ஆபத்து.
5. இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு.
6. இரத்தக் கொதிப்புக்கு அகத்திக் கீரை.
7. இருமலை போக்கும் வெந்தயக்கீரை.
8. உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்.
9. உஷ்ணம் தவிர்க்க கம்பங்களி.
10. கல்லீரல் பலம் பெற கொய்யா பழம்.
11. கொலஸ்ட்ரால் குறைக்க பன்னீர் திராட்சை.
12. சித்தம் தெளிய வில்வம்.
13. சிறுநீர் கடுப்புக்கு அண்ணாசி.
14. சூட்டைத் தணிக்க கருணைக்கிழங்கு.
15. ஜீரண சக்திக்கு சுண்டைக்காய்.
16. தலைவலி நீங்க முள்ளங்கிச்சாறு.
17. தேனுடன் இஞ்சி இரத்தத் தூய்மை.
18. பூண்டில் இருக்கு பென்சிலின் சக்தி.
19. மூல நோய் தீர வாழைப்பூ கூட்டு.
20. வாந்திக்கு மருந்து மணத்தக்காளி.
21. வாத நோய் தடுக்க அரைக்கீரை.
22. வாய் துர்நாற்றம் தீர்க்க ஏலக்காய்.
23. பருமன் குறைய முட்டைக்கோஸ்.
24. பித்தம் தணிக்க நெல்லிக்காய்.
25. குடல் புண் நலம் பெற அகத்திக்கீரை.

உணவு மருந்தாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், மருந்தே நமக்கு உணவாகும் நிலைமை உருவாகும்!


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Puthuyugam TV*** *: Every Tuesday 6 :15 a.m. Nambigai TV : Every Friday 6:15 am*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio :** TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தொடர் 13 எஸ்றா, நெகேமியா: சிறையிப்பிலிருந்து திரும்புதல்

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்: **எஸ்றா 1,3–10; நெகேமியா 1–8,13.**

## தலைப்பு

**எஸ்றா** என்ற புத்தகம், பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் மக்களை இரண்டாம் முறை வழிநடத்தி வந்த ஆசாரியரின் பெயரால் வழங்கப்படுகிறது. **நெகேமியா** என்ற புத்தகம் மூன்றாம் முறை வழிநடத்தி வந்த அப்புத்தகத்தின் பிரதானப் பாத்திரப் பெயரால் வழங்கப்படுகிறது.

## பின்னனி:

எரெமியா, எழுபது ஆண்டுகளில் சிறையிருப்பு ஒழியும் என்று தீர்க்கதரிசனம் கூறியிருந்தார் **(எரெமியா 25:11, 12:29:10).** இந்த எழுபது ஆண்டுகள் என்பவை, கி.மு.605ல் ராஜரீக வம்சத்தை பாபிலோனுக்கு முதன்முறையாக இட்டுச் சென்றதில் இருந்து (2 ராஜாக்கள் 24; தானியேல்1), செருபாபேலின் நடத்துவதின் கீழ் அவர்கள் முதல்முறை திரும்பி வந்தது வரையிலான (எஸ்றா 1) காலமாகும். இஸ்ரவேல் மக்கள் சிறையிருப்புக்கு கொண்டு போகப்படுதல், மூன்று நிகழ்ச்சிகளின் படிநிலைகளிலும் நடந்தது.



எஸ்றாவின் புத்தகம், முதல் இரண்டு திரும்பி வருதல்களைப் பற்றிக் கூறுகிறது. கி.மு.538ல் செருபாபேல், முதல் திரும்பி வருதலை வழிநடத்தினார். அவர் ஒரு அதிபதியாகப் பணிபுரிந்தார் **( ஆகாய் 1:1 ).** ஆசாரியரான யோசுவாவும் (எஸ்றா 3:2), தீர்க்கதரிசிகளான ஆகாய் மற்றும் சகரியா என்பவர்களும் (5:1,2), அவருடன் ஊழியம் செய்தனர். தேவாலயத்தைத் திரும்பக் கட்டுதல் என்பதே அவர்களுக்கு மாபெரும் அறைகூவலாக இருந்தது.

யூதா என்கிற ஒரு கோத்திரம் மாத்திரமே மொத்தமாக சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபடியால், எஞ்சியவர்கள் இப்போது 'யூதர்கள்' என்று அழைக்கப்பட்டனர் **( எஸ்றா 4:23 ).** இருப்பினும் இது, யூதா கோத்திரத்தார் மாத்திரமே திரும்பி திரும்பி வந்தனர் என்று அர்த்தப்படுவதில்லை. பன்னிரண்டு கோத்திரங்களில் எஞ்சியிருந்தவர்களும் திரும்பியிருந்தனர் **(எஸ்றா 6:17 :8:35 ).**

எஸ்றாவின் வரலாறு தேவாலயம் திரும்பக் கட்டப்பட்ட காலகட்டத்திற்குப் பொருந்துகிறது. அறுபது ஆண்டுகள் கடந்து சென்றன, அதன்பின்பு கி.மு.458ல் எஸ்றா இரண்டாவது திரும்புதலை வழிநடத்தினார். தேவாலய ஆராதனையை மீண்டும் கட்டியெழுப்புதல் என்பது அவரது ஊழியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எஸ்றா நியாயப்பிரமாண விற்பன்னர்களில் முதலாவதானவராக இருந்தார், இவர் "வேதபாரகர்" என்று(ம்) அறியப்பட்டார் (எஸ்றா 7:6).

எஸ்றா, கி.மு.444ல் மூன்றாவது திரும்பி வருதலை வழிநடத்திய நெகேமியாவுடன் இணைந்து, எருசலேமின் மதில்களைத் திரும்ப எடுத்துக்கட்டுவதில் ஊழியம் செய்தார். நெகேமியா ஒரு அதிபதியாயிருந்து பணியாற்றினார் **(நெகேமியா 5:14).** மல்கியா என்ற தீர்க்கதரிசி அனேகமாக, நெகேமியா மற்றும் எஸ்றா ஆகியோருடன் ஊழியம் செய்திருக்கலாம் ; அவர் நெகேமியா புத்தகத்தின் இறுதிப்பாதியில் கையாளப்பட்ட பிரச்சனைகளை எடுத்துரைத்தார்.

எஸ்றாவே தமது பெயர் கொண்ட இப்புத்தகத்தை எழுதியிருக்கலாம் ; 7-10 வரையுள்ள அதிகாரங்களில், 'தன்மை பெயர்ச்சொல்' பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். நெகேமியா என்ற புத்தகத்தையும் இவரே எழுதியிருப்பார் என்றால், இவர் அனேகமாக நெகேமியாவின் தனிப்பட்ட பதிவேடுகளைப் பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலினால் பயன்படுத்தியிருக்கலாம் (நெகேமியா 1:1 ஐக் கவனிக்கவும்)

## வரைகுறிப்புகள்:

### எஸ்றா

I. முதல் திரும்புதல் : தேவாலயத்தைத் திரும்ப கட்டியெழுப்புதல் (1-6); சமாரியர்களால் எதிர்ப்பு (4).

II. இரண்டாம் திரும்புதல் : ஆவிக்குரிய தன்மையைத் திரும்ப கட்டியெழுப்புதல் (7-10)

### நெகேமியா

I. மூன்றாம் திரும்புதல் : மதில்களைத் திரும்ப கட்டியெழுப்புதல் ( 1-6 ).

அ. "கட்டியெழுப்புதல்" எவ்வாறு என்பதற்கு மாபெரும் உதாரணம்.

1. மாபெரும் நடத்துவத்துவம்: நெகேமியா – ஜெபத்தின் மனிதர் : (2:4: 4:4,5 : 6:9,14 ).
2. மாபெரும் பின்பற்றுதல் : மக்கள் ( 2:18 :4:6 ).

ஆ. ஊக்கமிழக்கச்செய்ய முயற்சி.

1. சக்கந்தம் பண்ணுதல் ( 4:1-6 )
2. யுத்தம் (4:7-23 )
3. "உச்சி" மாநாட்டிற்கு அழைப்பு (6:1-4 ).
4. நெகேமியாவின் நோக்கங்கள் தவறு என்று குற்றம் சாட்டப்படுதல் (6:5-9 )
5. கள்ளத் தீர்க்கதரிசி ( 6:10-14 )

II. ஆளுகைசெய்தல் : நாட்டைத் திரும்பக் கட்டியெழுப்புதல் ( 7-13 )

### எஸ்ரா மற்றும் நெகேமியா என்ற புத்தகங்களிலிருந்து பாடங்கள்

யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்புதல் என்பது, தேவன் இரண்டாவது வாய்ப்பு ஏதுமின்றி தேவனாகவே இருக்கின்றார் என்ற மாபெரும் சத்தியத்தை மீண்டும் அடிக்கோடு இடுகிறது.

விக்கிரகாராதனையின் விளைவு என்பது, இஸ்ரவேல் மக்கள் தங்கள் சிறையிருப்பிலிருந்து கற்றுக்கொண்ட ஒரு பாடமாக இருந்தது. யூதர்களிடத்தில் விக்கிரகாராதனை என்பது திரும்ப ஒருக்காலும் ஒரு பிரச்சனையாக இருந்ததில்லை.

கலப்பினத் திருமணம்-யூதரல்லாதவர்களுடன் திருமண உறவு- என்பது அவர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருந்த ஒரு பிரச்சனையாக இருந்தது (எஸ்றா 9,10 ; நெகேமியா 13). ஒருவர் யாரைத் திருமணம் செய்து கொள்கின்றார் என்பது உண்மையிலேயே மாறுபாட்டை ஏற்படுத்துகிறது.

உண்மையான போதித்தல், பிரசிங்கித்தல், மற்றும் வேதவாசிப்பு ஆகியவை பற்றிய மாபெரும் விவரிப்புகளில் ஒன்று நெகேமியா 8:8 ல் தரப்பட்டுள்ளது.

தேவன், மேசியாவை உலகிற்குக் கொண்டுவருதல் என்ற தமது திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தினார்.



செருபாபேல் என்பவர் தாவீதின் ராஜரீக வம்சத்தில் வந்த 'யோயாக்கீன்' என்ற அரசரின் கொள்ளுப் பேரனாக இருந்தார். (1 நாளாகமம் 3:19); அவர் கிறிஸ்துவின் முன்னோர்களில் ஒருவராயிருந்தார் (மத்தேயு 1:12 ) !

## சிறுவர்க்கான கேள்விகள்

1. மகதலேனா மரியாள் எப்படி ஆண்டவரைத் தேடினாள்?
2. உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதலில் தரிசித்தது யார்?
3. பவுல் தினந்தோறும் என்ன செய்தார்?
4. நீ இந்த விடுமுறை தினங்களில் என்ன செய்ய போகிறாய்?
5. தேவ பாதுகாப்பை நோவாவும், அவன் வீட்டாரும் எதனால் பெற்றனர்?
6. ஆண்டவரிடத்தில் நன்றியுள்ளவராக இருக்க என்ன செய்ய போகிறீர்கள்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-06-2016

பாடம் 1

# நீங்கள் இயேசுவில் அன்பாயிருக்கிறீர்களா?

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ் ! உங்கள் எல்லோருக்கும் ஆண்டவர் இயேசுவை ரொம்பப் பிடிக்கும் தானே? ஆண்டவர் இயேசு மீது அன்பாக இருந்த ஒரு அக்காவைப் பற்றி படிப்போமா?

மகதலேனா மரியாள் என்ற ஒரு அக்கா இருந்தார்கள். அவர்களுக்கு ஏழு பிசாசு பிடித்திருந்தது. நம்ம ஆண்டவர் இயேசு அந்த பிசாசுகளைத் துரத்தி, அந்த அக்காவை சுகமாக்கினார். அன்று முதல் அந்த அக்கா இயேசுவை மிகவும் நேசித்து, அவருடைய போதனைகளைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதை பின்பற்றினாள்.



ஆண்டவர் இயேசுவை, ரோமர்கள் சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள். அவரை எடுத்து ஒரு புதிய கல்லறையில் அடக்கம் செய்தார்கள். மூன்றாம் நாள் அதிகாலையில் மகதலேனா மரியாள், மற்ற சில பெண்களும் ஆண்டவருடைய சரீரத்திற்கு சுகந்தவர்க்கமிட கல்லறைக்கு வந்தார்கள். வந்தவர்களுக்கு ஒரே ஆச்சரியம்! ஆண்டவர் இயேசு தாம் உயிரோடு இருந்தபோது சொன்னபடியே, உயிர்த்தெழுந்திருந்தார். அந்த செய்தியைத் தூதர்கள் அவர்களுக்கு சொன்னார்கள். அதைக் கேட்ட எல்லா பெண்களும் போய்விட்டனர்.

ஆனால் மகதலேனா மரியாள் மாத்திரம் அங்கே இருந்து போகாமல், அழுது கொண்டே ஆண்டவரைத் தேடினாள். அதினால் என்ன நடந்தது தெரியுமா? உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவை, முதலில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். அந்த அக்கா ஓடிப்போய் அந்த செய்தியை அப்போஸ்தலருக்கு அறிவித்தாள்.

குட்டீஸ், ஆண்டவர் இயேசு, நீங்கள் என்னிடத்தில் அன்பாக இருந்தால், நான் சொன்னதை செய்யுங்கள் என்றார். ஆண்டவர் என்ன சொன்னார்? நீங்கள் போய், எல்லாரிடத்திலும் என்னைப் பற்றி அறிவியுங்கள் என்றார். நீங்களும் ஆண்டவர் இயேசுவிடம் அன்பாயிருக்கிறீங்க தானே? அப்படினா தினமும் ஆண்டவரைப் பற்றி யாருக்காவது சொல்லுங்கள்.

**மனன வசனம்! உபா 5:10**

என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

**– குயினி பிலேமோன்**

பாடம் 2

# விசுவாசத்தை அறிக்கையிடுங்கள்!

சிறுவர் பகுதி

என் அன்பு செல்லங்களா ! நீங்கள் எல்லோரும் நல்லாயிருக்கிறீர்களா? விடுமுறையின் சந்தோஷத்தில் இருப்பீர்கள்; இந்த சந்தோஷத்தோடே வேதாகமத்தில் உள்ள பவுல் அண்ணாவைப் பற்றி அறிந்து கொள்ளலாமா?

சவுல் என்ற ஒரு அண்ணன் இருந்தார். அவருடைய இன்னொரு பெயர் பவுல். இந்த பவுல், ஆண்டவர் இயேசுவை முதலில் நம்பவே இல்லை. ஆகையால் இயேசுவை நம்பின அனைவரையும் துன்பப்படுத்தினார். இப்படி ஒரு முறை தமஸ்கு பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களை துன்பப்படுத்த சென்ற போது, வழியில் பவுல் இயேசுவைச் சந்தித்தார். அன்றிலிருந்து பவுல் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம். இயேசுவையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசித்து, அதன்படி வாழ ஆரம்பித்தார்.

அது மட்டுமா? அதிலிருந்து பவுல் அண்ணன் இயேசுவின் மேல் வைத்திருந்த விசுவாசத்தை,

தினந்தோறும் யாரிடமாவது அறிவித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற வைராக்கியம் கொண்டிருந்தார். யாரைப் பார்த்தாலும் இயேசுவைப் பற்றி சொல்லிக்கொண்டே இருப்பார். இவர் இயேசுவைப் பற்றி சொல்வதினால் பல கஷ்டங்கள் மற்றும் போராட்டங்கள் வந்தது. ஆனாலும் இயேசுவைப் பற்றி சொல்வதை நிறுத்தவில்லை. சிறைச்சாலையில் போட்டார்கள், வாரினால் அடித்தார்கள், திருடர்கள் வேதனைப் படுத்தினார்கள், அநேகமுறை தூக்கமில்லாமல் இருந்தார்; உடையில்லாத நிலை என இவ்வளவு கஷ்டத்திலும் இயேசுவைக் குறித்து, தான் விசுவாசிப்பதை யாரிடமாவது சொல்லிக்கொண்டே இருந்தார். காரணம் என்ன தெரியுமா? அவருக்குள் இருந்த விசுவாசம்!



பிள்ளைகளே ! ஒரு பேனாவை நீங்கள் நல்லா இருப்பதாக நம்பினால், அதை எல்லாரிடமும் சொல்வீர்கள் அல்லவா? நீங்கள் அணிந்திருக்கம் ஆடை (Dress) நன்றாக இருப்பதாக நம்பினால், அதைக் குறித்து யாரிடமாவது சொல்வீர்கள் அல்லவா? நீங்கள் அணிந்திருக்கும் செருப்பு உங்களுக்கு நன்றாக இருந்தால், அதைக் குறித்து யாரிடமாவது சொல்வீர்கள் அல்லவா? நீங்கள் நம்புகிற, நமக்காக தன் ஜீவனையே கொடுத்த இயேசுவைக் குறித்து, இந்த விடுமுறையில் யாரிடமாவது தினமும் சொல்வீர்களா? நீங்கள் இயேசுவின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை, விசுவாசம் எல்லாருக்குள்ளும் வர உதவுவீர்களா?கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்!

**மனன வசனம்! யாக்கோபு 2:26**

“அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது”

---

பாடம் **3**

# தேவனுக்கு கீழ்ப்படிவோம்!

சிறுவர் பகுதி

ஹலோ குட்டீஸ் ! நாம் இந்த மாதம் வேதாகமத்திலிருந்து தேவனுக்கு கீழ்ப்படிந்து நடந்த நோவாவைப் பற்றி தெரிந்து கொள்வோம்.



பரலோக தேவன் மனுஷனை உண்டாக்கின பின்பு, மனுஷர்கள் பூமியின் மேல் பெருகத் துவங்கினார்கள். அப்படி பெருகின மனிதர்கள் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்து, அவரை மிகவும் வேதனைப்படுத்தினார்கள். ஆயினும் அந்த காலத்திலும், நோவா என்பவர் தேவனுக்கு கீழ்ப்படிந்து, தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்தார். ஆகையால் நோவாவிற்கு தேவனுடைய கண்களில் தயவு கிடைத்தது.

தேவன் நோவாவை நோக்கி : ‘இந்த ஜனங்கள் அனைவரும், மிகவும் பாவமான காரியங்களை செய்கிறார்கள். ஆகையால் நான் இந்த உலகத்தை வெள்ளத்தால் அழிக்கப்போகிறேன். நீ எனக்கு கீழ்ப்படிந்து நடந்ததால் உன்னையும் உன் குடும்பத்தையும் அழியாமல் காப்பேன். ஆகையால், நீ கொப்பேர் மரத்தால், 300 முழு நீளமும், 50 முழு அகலமும், 30 முழ உயரமும் கொண்ட ஒரு பேழையை (கப்பல்) உண்டாக்கு’ என்றார்

தேவன் தனக்கு கட்டளையிட்டபடியே எல்லாவற்றையும்

நோவா செய்தார். ஜலப்பிரளம் (பெரு வெள்ளம்) வந்து எல்லோரையும் அழித்துப்போட்டது. ஆனால் நோவாவும் அவன் குடும்பத்தினரும் தேவனால் பாதுகாக்கப்பட்டனர், மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

குட்டீஸ் ! பரலோக தேவன் தனக்கு கீழ்படிந்த நோவாவையும் அவன் வீட்டாரையும் காப்பாற்றினார், மற்றும் ஆசீர்வதித்தார். நாமும் தேவனுக்கு கீழ்ப்படியும் போது நம்மையும் பாதுகாத்து, ஆசீர்வதிப்பார். தேவன் நமக்கு கொடுத்த மிக முக்கியமான கட்டளை என்ன தெரியுமா? தினமும் யாருக்காவது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை பற்றி சொல்ல வேண்டும் என்பது தான். ஆகையால் இன்றிலிருந்து இந்த காரியத்தை செய்து, தேவ பாதுகாப்பையும் ஆசீர்வாதத்தையும் அனுபவித்துக் கொள்வோம்!

**மனன வசனம் : மத்தேயு 28:20** நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம்

சகல நாட்களிலும் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்

---

பாடம் 4

# நன்றியுள்ளவர்களாயிருப்போம் !

சிறுவர் பகுதி

டியர் குட்டீஸ் ! விடுமுறை என்பது சந்தோஷமாக இருந்தாலும், அக்னி நட்சத்திர வெயில் மிகவும் கொடுமையாக இருக்கிறதா? உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம். பரலோக தேவன் உங்களை பத்திரமாக பாதுகாப்பார்! இந்த மாதம், ஆண்டவரிடத்தில் நன்றியுள்ளவராக இருந்த ஒருவரைப் பற்றி தெரிந்துகொள்வோமா?



நமது ஆண்டவர் இயேசு, கலிலேயா கடலை கடந்து கதரேனருடைய நாட்டிற்கு சென்றார். அப்பொழுது பிசாசுகள் பிடித்த ஒருவன், உடை எதுவும் அணியாமல், பிரேத கல்லறையிலிருந்து இயேசுவுக்கு எதிராக புறப்பட்டு வந்தான்.

அவன் இயேசுவை நோக்கி : 'தாவீதின் குமாரனே ! வேதனைப்படுத்த வேண்டாம்' என்றான். இயேசு அந்த பிசாசை அதட்டினார். உடனே அந்த பிசாசுகள் அனைத்தும், அருகிலிருந்த பன்றிக்கூட்டத்திற்குள் போய், உயர்ந்த மேட்டிலிருந்து கடலில் விழுந்து இறந்துபோயின.

பிசாசுகள் நீங்கின அந்த மனிதன், உடை அணிந்து ஆரோக்கியமானவனாக இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்திருந்தான். இதைக்கண்ட அந்த ஊர் மக்கள் அனைவரும் பயந்தார்கள். அந்த சுகமான அண்ணன் இயேசுவிடம், 'இயேசுவே நான் உம்மோடு இருக்க உத்தரவு கொடும்' என்று வேண்டினான்.ஆண்டவர் இயேசுவோ: 'நீ போய் கர்த்தர் உனக்கு இறங்கி, செய்தவைகளை அறிவி' என்றார். அந்த அண்ணனும் இந்த செய்தியை அந்த ஊர் முழுவதும் பரப்பினான்.

குட்டீஸ் ! அந்த அண்ணன் ஆண்டவர் தனக்கு செய்த நன்மைகளுக்கு தக்க, எதையாவது செய்ய வேண்டும் என்ற நன்றியுணர்வுதான், அவனை ஆண்டவரைப் பற்றி நாடெங்கும் சொல்ல வைத்தது. உங்களுக்கும் ஆண்டவர் நிறைய நன்மைகள் செய்திருக்கிறார் அல்லவா? நீங்களும் நன்றியுள்ளவர்களாக இருக்க விரும்பினால், தினமும் ஆண்டவரைப் பற்றி சொல்லிக் கொண்டே இருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்...

**மனன வசனம்! சங்கீதம் 107:22**

"ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சங்கீதத்தோடே விவரிப்பார்களாக"

# பெரியவர்களுக்கான கேள்விகள்

1. ஞானத்தையும், போதகத்தையும் அசட்டை பண்ணுகிறவர்கள் யார்?
2. அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என நினைப்பவர்கள் யார்?
3. மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்பவர்களை எசேக்கியேல் யாரென்று சொல்லுகிறார்?
4. ''எவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்" என்றார் இயேசு?
5. எப்பொழுது ஒரு சகோதரன் "அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனை போலவும்" இருப்பதாக என்று இயேசு சொன்னார்?
6. ஞானமுள்ளவன் எவைகளை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறான்?
7. யோவான் எதினிமித்தம் பத்மு தீவிலே இருந்தார்?
8. பரிசுத்தவான்களுடைய குறைவில் என்ன செய்ய வேண்டும்?
9. தேவன் ஏன் 'ஒருவனை' படைத்தார்?
10. கொஞ்சக்காலந்தோன்றி பின்பு தோன்றமற்போகிற புகையைப் போன்றது எது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-06-2016**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## ஏப்ரல் மாத பதில்கள்

1. 1 கொரி 9:16 2. லூக்கா 15 : 10 3. மாற் 16 :15
4. மத் 10:32 5. I யோவா 2 :22 6. II ராஜா 7 :9
7. II கொரி 6:2 8. ரோமர் 1 :16 9. II பேது 3 :9
10. வெளி 2 :10

## ஏப்ரல் மாத பதில் எழுதியவர்கள்

1. Mrs. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
2. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
3. Mrs. மேரி ராஜ் – மதுரை
4. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
5. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
6. S.M. தவமணி தேவி– திருப்பூர்
7. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
8. Mrs.S. செல்வி ஜான்ரோஸ்– நாகர்கோவில்
9. Mrs.R. ஞானசிரோன்மணி– சமயநல்லூர்
10. Mrs. ரேச்சல் தமிழரசி– மதுரை
11. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
12. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
13. Mrs. தெல்மா ஸ்டான்லி– மதுரை
14. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
15. Mrs. ஹெலன் திலக் – . மதுரை
16. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
17. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
18. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
19. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
20. ச. பன்னீர் செல்வம் – சேலம்
21. Mrs. I. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
22. J. விஜய் – வளர்நகர்
23. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
24. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
25. J. ஜோசப் – கோவில்பட்டி
26. S. சந்திரமணி – வேலூர்
27. ஜெயராஜ் செல்வி – நாமக்கல்
28. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
29. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு– செங்கல்பட்டு
30. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
31. A. ஏசுநேசன் – புதுச்சேரி
32. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
33. G. அந்தோணி தாஸ் – பரமக்குடி
34. புஷ்பா ஜேம்ஸ்– விருதுநகர்
35. R. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
36. S. தேவராஜன் – கோவை
37. I. அலேக்ஸாண்டர் சாலமோன்– சிவகங்கை
40. Mrs. ஜாய்ஸ் ஜோசுவா– வெள்ளறம்
41. S. கேத்ரின் அருள்நேசம்– மதுரை
42. Mrs.ஷீலா ரிச்சர்ட் தாஸ்– வெள்ளறம்
43. A. ரோஸ்மேரி– சென்னை

## சென்ற மாதம் பெயர் விடுபட்டவர்கள்

1. W. கெவின் கேப்ரியேல் – மதுரை
2. R. மரிய ஜோசப் – முடிச்சூர்
3. A. சந்திரா – மதுரை
4. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
5. J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் – ஈரோடு
6. Mrs. ஸ்டெல்லா வால்டர் – கோவை
7. I. அலேக்ஸாண்டர் சாலமோன்– சிவகங்கை
8. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
9. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
10. I. ஷீபா பிரியதர்ஷினி– சிவகங்கை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# வேதாகம பாடம் படிப்பவர்களுக்கு பைபிள் பரிசு

## Bibles given to Bible Course Students





மதுரை தீக்கதிரில் தபால் வழி வேதாகம பாடத்தை முடித்து சான்றிதழும் பைபிளும் பரிசாக பெற்றவர்கள்





மதுரை ஓடைப்பட்டியில் தபால் வழி வேதாகம பாடத்தை முடித்து சான்றிதழும் பைபிளும் பரிசாக பெற்றவர்கள்





மதுரை அரசரடியில் தபால் வழி வேதாகம பாடத்தை முடித்து சான்றிதழும் பைபிளும் பரிசாக பெற்றவர்கள்





மதுரை ஒத்தக்கடையில் தபால் வழி வேதாகம பாடத்தை முடித்து சான்றிதழும் பைபிளும் பரிசாக பெற்றவர்கள்

**வாசகர்களே ! இந்த விடுமுறை காலங்களில் நீங்களும் தபால் வழி வேதாகம பாடத்தை படித்து சான்றிதழும் பைபிளும் பரிசாக பெறுங்கள்**

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th May 2016

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!



தமிழ்நாடு வேதாகம பயிலகத்தில் ஆலோசனை வழங்கும் நமது துணை ஆசிரியர் சகோ. ஆண்டனி ராஜா



திருவாதவூர் கிராம கிறிஸ்துவின் சபையில் நடைபெறும் தொழுகை. ஊழியர் : சகோ. அன்பு ஏசுதாஸ்



மாதந்தோறும் ஏழை பார்வையற்றோருக்கு மற்றும் விதவைகளுக்கு வழங்கப்படும் இலவச அரிசி

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To